දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

இளங்கலைமாணி முதலாம் ஆண்டுப் பரீட்சை (வெளிவாரி புதியபாடத்திட்டம்) **(டிசம்பர் 2018)**

## ECNE 102 ஓப்பீட்டுப் பொருளாதார அபிவிருத்தி

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக
இவ்வினாத்தாளில் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆகும்.
ஒவ்வொரு வினாவிற்கும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன
ஒதுக்கப்பட்டுள்ள நேரம்: (3) மூன்று மணித்தியாலங்கள்

### <u>பகுதி I - ஐக்கிய இராச்சியம்</u>

1. (i) 'மானிய முறை' என்ற பதத்தின் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது? (05 புள்ளிகள்)
   (ii) மானிய முறையின் பொருளாதார அம்சங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுவதுடன், இங்கிலாந்தில் அம்முறையின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த சக்திகள் குறித்தும் ஆராய்க (15 புள்ளிகள்)

2. (i) 'நிலஅடைப்புக்கள்' என்பதனால் கருதப்படுவது யாது? (06 புள்ளிகள்)
   (ii) இங்கிலாந்தின் இரண்டாவது நில அடைப்பு இயக்கத்தின் வகிபாகம் மற்றும் அதன் முக்கியத்துவம் ஆகியவற்றினைப் பரிசீலிக்குக. (14 புள்ளிகள்)

3. "இங்கிலாந்தின் கைத்தொழில் அபிவிருத்தியினை ஒரு சடுதியான நிகழ்வாக அன்றி அதனை ஒரு நீண்ட செய்முறையாகவே கருத முடியும்." ஆராய்ந்து கருத்துரைக்குக. (20 புள்ளிகள்)

4. பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்தின் பொருளாதார வளர்ச்சியினைத் துரிதப்படுத்துவதில் வெளிநாட்டு வர்த்தகம், அதன் குடியேற்ற நாடுகள் ஆகியவற்றின் பங்களிப்புக்களை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

5. இங்கிலாந்து தொடர்பாகப் பின்வருவனவற்றுள் எவையேனும் **நான்கினைப்** பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக:-
   (i) புகையிரதப் போக்குவரத்தின் பொருளாதாரத் தாக்க விளைவுகள்
   (ii) 1815 இன் தானியச் சட்டம்
   (iii) பருத்தி நெசவுக் கைத்தொழிலில் பிரதான கண்டுபிடிப்புக்கள்
   ((iv) 'தலையிடாக் கொள்கை' என்ற தத்துவம்
   (v) ஆவணர் இயக்கம் (04 x 05=20 புள்ளிகள் )

...2 →

## பகுதி II - இலங்கை

6. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், இலங்கையில், தேயிலைக் கைத்தொழிலின் வளர்ச்சிக்கு வழிகோலிய காரணிகளை ஆராய்க. (20 புள்ளிகள்)

7. பத்தொன்பதாம் நூற்றாண்டில், இலங்கையின் கிராமிய விவசாயத் துறையின்மீது பிரித்தானியரின் நிலக் கொள்கையானது எத்தகைய தாக்க விளைவுகளை ஏற்படுத்தியது? (20 புள்ளிகள்)

8. இலங்கையில் கோப்பிச் சதாப்த காலப்பகுதியில் ஊழியச் சந்தையின் நிரம்பல் தரப்பிலான பற்றாக் குறைகளுக்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்க. (20 புள்ளிகள்)

9. "இலங்கையின் பெருந்தோட்ட விவசாயமானது மரபுரீதியான உழவர் விவசாயத்துடன் ஒப்பிடுமிடத்து, ஒரு அபிவிருத்தியடைந்த உற்பத்தி வடிவத்தினைப் பிரதிநிதித்துவப்படுவத்துவதாக அமைந்து காணப்பட்டது." ஆராய்ந்து கருத்துரைக்குக (20 புள்ளிகள்)

10. இலங்கை தொடர்பாகப் பின்வருவனவற்றுள் எவையேனும் **நான்கினைப்** பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக:-
    (i) தரிசு நிலச் சட்டம்
    (ii) கோல்புறூக் கமரன் ஆணைக் குழுவின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள்
    (iii) ஒரு மாற்று பெருந்தோட்டப் பயிர் என்ற வகையில் சிங்கோனா
    (iv) பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தொழிற் சங்க இயக்கங்கள்
    (v) 1900-1934 வரையிலான காலப்பகுதியில் இறப்பர் கைத்தொழில் (04 x 05=20 புள்ளிகள் )

---